# அரசியல் கட்சிகள் கலைக்கப்பட்டன

REGD. No M. 6311 PHONE No. 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

| | | | |
|---|---|---|---|
| தனி இதழ்: ஒரு அணா | சென்னை: புரட்டாசி 8உ | வெள்ளி (24—9—54) | மலர்: 2 |
| இலங்கையில் 10 சதம் | வெளியூர்: புரட்டாசி 9உ | சனி (25—9—54) | இதழ்: 88 |


# விவசாயிகள் போராட்டம்

## தி. மு. க. தோழர்கள் உள்பட 80 பேர் கைது

### கலெக்டரின் சமரச முயற்சி

மேலூர், செப். 22—

மதுரை மாவட்டத்தில் மேலூர் பகுதிகளில் 700 ஏக்கர் நிலமுள்ள மிராசுதார் ஒருவர் 30 ஆண்டுகளாக நிலத்தில் உழுது வருகிற விவசாயிகளை வெளியேற்ற முயற்சித்து, விவசாயிகள் நிலத்தில் இறங்கக்கூடாதென 144 தடை உத்தரவு பெற்றிருக்கிறார் என்று தெரிகிறது.

இந்த உத்தரவை மீறி விவசாயப் பெருங்குடி மக்கள் மறியல் செய்தார்களாம்.

போலீசார் அவர்களைக் கைது செய்து மேலூர் சப்-ஜெயிலில் லாக் அப்பில் வைத்து, 22-ம் தேதி விடுதலை செய்து, அவர்கள் மீது வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்று தெரிகிறது.

தடையை மீறியதாக 20 பெண்கள் உள்பட 80 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

இப்போராட்டத்தில் எல்லாக் கட்சியினரும் கலந்துகொண்டனர் என்று கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட தோழர்களில் தண்டமங்கலம் தி. மு. கழகத் தோழர்கள் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

தோழர்கள் அ. முத்துராமன், பெ. சிதம்பரம், ப. இராமையா, ப. கிருஷ்ணன், வே. அழகிரி, வ. வடமலை, சி. முத்தையா, வி. மூக்கன், மு. முடிகொண்டான் ஆகிய தி. மு. கழகத் தோழர்கள் இப்போராட்டத்தில் கலந்துகொண்டனராம்.

மதுரை மாவட்ட கலெக்டரின் சமரச முயற்சியின் பேரிலும் சமரச ஏற்பாடுகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கவும், விவசாயிகள், போராட்டத்தை 26—9—54 வரை நிறுத்தியுள்ளனர் என்று தெரிகிறது.

## திருவாரூரில் கழகக் கொடி எரிக்கப்பட்டது

17—9—54-ல் திருவாரூர் சன்னதித் தெரு முனையில், பழைய கொடியை எடுத்துவிட்டு புதிதாகக் கழகக் கொடி ஒன்று ஏற்றப்பட்டிருந்தது.

அதை 19—9—54 இரவு யாரோ சிலர் எடுத்து எரித்து எரியாத பாதிக் கொடியை, கழக உறுப்பினர் கீழ வீதி பி.ரா. ஜெயராமன் வீட்டுக்கு முன் போட்டுவிட்டுச் சென்றிருக்கின்றனர்.

மறுநாள் காலையில் செய்தி அறிந்த கழகச் செயலாளர் தோழர் டாக்டர் இரா. விசயராகவன், கழகத் தோழர்களை கலந்துகொண்டு, போலீசில் புகார் செய்துள்ளார். போலீசார் புலன் விசாரித்து வருகின்றனர்.

# கவர்னர் கண்களை மறைக்க!

## தி. மு. க. கொடியை எரித்த போலீசார்!

### ஜனநாயக ஆட்சியின் விசித்திரப் போக்கு!

சென்னை கவர்னர் திரு பிரகாசா, கடந்த 17-ம் தேதியன்று திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்குச் சென்று கொண்டிருக்கையில் கருங்குளம் எனும் கிராமத்தில் பறந்து கொண்டிருந்த தி. மு. கழகக் கொடிகளைப் போலீசார் அகற்றி, தீயிட்டுக் கொளுத்தியிருக்கிறார்களென்று தெரிகிறது.

திருநெல்வேலிக்கும்–திருச்செந்தூருக்குமிடையேயுள்ள வேறு பல கிராமங்களிலும் இம்மாதிரியான கொடி எரிக்கும் செயல்கள் நடைபெற்றிருக்கின்றன.

கவர்னரது கண்களிலே தி. மு. கழகத்தின் கொடி படக்கூடாது என்பதற்காக இவ்வாறு செய்தார்களாம்!

# அக். 16-ல் பிரெஞ்சிந்திய காலனிகள் விடுபடும்!

## சட்ட சபை உறுப்பினர்கள் இணைப்புக்கான வாக்களிப்பு செய்வர்

### அதிகாரிகள் கப்பல் ஏறுவர்; ஏற்பாடுகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டன!

புதுச்சேரி செப் 23—

பிரெஞ்சிந்திய காலனிகள் மீதுள்ள தனது அதிகாரத்தை இந்திய சர்க்காரிடம் இன்னும் மூன்று வாரங்களில் பிரெஞ்சு சர்க்கார் ஒப்படைப்பார்கள் என்று தெரிய வருகிறது. அதிகார மாற்றம் குறித்து எல்லா ஏற்பாடுகளும், ஏறக்குறைய முடிவடைந்துவிட்டன எனலாம்.

வருகிற அக்டோபர் 15-ம் தேதி பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் விடுமுறை தினமாக இருக்கும் என்று தெரிகிறது.

அன்றைய தினம் பிரெஞ்சிந்திய சட்டசபை உறுப்பினர்களும், ஏற்கனவே விடுவிக்கப்பட்ட பகுதிகளின் பிரதிநிதிகளும், வாரண்டு பிறப்பிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களும், கோட்டக்குப்பம் எல்லையில் கூடுவார்கள்; அங்கே இந்தியாவுடன் இணைவது பற்றி அந்த உறுப்பினர்கள் அனைவரும் வாக்குப் பதிவு செய்வார்கள்; இணைப்பிற்கான ஒப்புதல் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அக்டோபர் 16-ம் நாள் இந்திய சர்க்காரின் பிரதிநிதி தக்க மரியாதைகளுடன் வரவேற்கப்படுவார்; பிரெஞ்சுக்காரர்கள் குடும்பத்துடன் வெளியேறுவார்கள்.

17-ம் தேதியன்று அதிகாரம் முறைப்படி இந்தியப்

(4-ம் பக்கம் பார்க்க)

# பார்மோசா விடுதலை

## அமெரிக்கா தலையிடுவதை அனுமதியோம்!

### சீனப் பிரதமர் சௌ-என்-லாய் எச்சரிக்கிறார்

"பார்மோசாவை விடுதலை செய்யும் பிரச்சினை, சீனாவின் உள்நாட்டு விஷயமாகும்; அதில் எந்த வகையிலும் அமெரிக்கா தலையிட முடியாது. பார்மோசாவை அமெரிக்கா, 'ஆக்கிரமித்து' அடிமை கொண்டிருப்பதை சீனா பொறுத்துக் கொண்டிருக்க முடியாது; அனுமதிக்க முடியாது.

"பார்மோசா விடுதலை செய்யப்பட்டே ஆக வேண்டும்; அது விடுவிக்கப்படாதவரையில், தூர கிழக்குப் பிரதேசத்தில் சமாதானம் நிலவுவது உறுதி செய்யப்பட முடியாது."

—இவ்வாறு, சீனப் பிரதமர் சௌ-என்-லாய், சீன தேசிய மக்கள் காங்கிரஸ் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது:—

"பார்மோசா, ஐ. நா.-வின் பாதுகாப்பிலோ அல்லது அது மாதிரியான வேறெந்த பாதுகாப்பிலோ விடப்படுவதை சீன மக்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.

[illegible] மெழ்ஸ், [illegible]-ஷேக் கும்பலுடையவும், அமெரிக்காவினுடையவும் நடவடிக்கைகள், அவர்கள் ஆசிய மக்களின் விரோதிகள் என்பதை மட்டுமின்றி, உலகத்திற்கே முதல் நம்பர் விரோதிகள் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

"பார்மோசா கடற்கரையில் உள்ள அமெரிக்க கப்பற் படை அடித்துத் துரத்தப்பட வேண்டும்.

"நாம் பார்மோசாவை விடுவிக்க விரும்புகிறோம்; அதே நேரத்தில், உலகெங்குமுள்ள சமாதான விரும்பிகளுடன் நட்புறவு கொண்டு, உலகில் சமாதானத்தை நிலைநாட்டவும் ஆசைப்படுகிறோம்."

"ஜப்பான், அமெரிக்காவுடன் கொண்டுள்ள தொடர்பை ரத்து செய்து கொண்டு, ஒரு பரிபூரண சுதந்திர ஆசிய நாடாக விளங்க வேண்டும்; சீனா, ஜப்பானுடன் ராஜீயத் தொடர்பு கொள்ளத் தயாராயிருக்கிறது; அதன் மூலம் ஆசியாவில் சமாதானம் நிலை பெறவும் முடியும்" என்றும் சௌ-என்-லாய் வேண்டுகோள் விடுத்தார்.

# ஈராக் சர்க்கார் உத்திரவு

## இனவாரி, வகுப்புவாரி — கழகங்கள் அமைக்கத்தடை

### மாணவர்கள் அரசியலில் பங்குகொள்ள கூடாதாம்

### ஆளும் கட்சியின் பத்திரிகைக்கு ஒரு ஆண்டு தடை விதிக்கப்பட்டது

பாக்தாத், செப். 22—

இராக் சர்க்கார், இன்றிரவு, நாட்டில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளையும் அதிகாரபூர்வமாகக் கலைத்துவிட்டது.

மாணவர்கள் எந்தக் கட்சிகளிலும் சேர்ந்து பணியாற்றக் கூடாதென்றும், இனவாரியாக, அல்லது, வகுப்புவாரியாக எந்த விதக் கழக அமைப்புகளும் கூடாதென்று சர்க்கார் தடை செய்துவிட்டது.

சுதந்திரக் கட்சி, சோஷலிஸ்டு கட்சி, ஐக்கிய மக்கள் முன்னணி என்ற மூன்று அரசியல் கட்சிகளும் சர்க்காரால் கலைக்கப்பட்டுவிட்டது. இதற்கான தனி மசோதா ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாம்.

இராக் மந்திரி சபையின் சுதந்திரக் கட்சியின் அதிகாரபூர்வமான பத்திரிகையான 'லிவா அல் இஸ்தி குலால்' ஒரு ஆண்டு காலத்திற்கு வெளியிடப்படக்கூடாது என உத்திரவிட்டிருக்கிறது.

அரசியல் கட்சிகளைக் கலைத்து சர்க்கார் வெளியிட்டுள்ள உத்திரவுடன் சேர்க்கப்பட்டிருக்கும் விளக்க உரையில், சில அரசியல் கட்சிகள் சட்ட விரோதமான, நாசகாரச் செயல்களில் ஈடுபட்டிருக்கிறதாகவும், தற்போதைய ஆட்சியை எதிர்த்து மக்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டி, வெளிநாட்டு சக்திகளுக்கும் பணிந்து, நாட்டிலே ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு, மக்களைச் சுரண்டுகிறார்கள் என்றும் காணப்படுகிறது.

செப்டம்பர் 12-ம் தேதியன்று இராக்கில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பிரதமர் ஜெனரல் நூரி அல் செய்தின் எதிர்ப்பாளர்கள் தேர்தல் சுதந்திரமாக நடைபெறாது என்று அவர்கள் கலந்து கொள்ளவில்லை.

இராக்கில் சென்ற மாதம் அரசியலில் ஏற்பட்ட குழப்பத்தைத் தொடர்ந்து பிரதமர் இராக்கின் மிகப் பெரிய அரசியல் கட்சியான தனது அரசியல் யூனியன் கட்சியைக் கலைத்துவிட்டார். இப்போது சர்க்காரின் உத்தரவு, மீதமுள்ள மூன்று அரசியல் கட்சிகளையும் கலைத்துவிட்டது. இப்போது ஈராக்கில் எந்தவிதமான அரசியல் கட்சியும் இயங்குவதற்கு அனுமதி இல்லை.

## பண்டித நேரு—ஹோ-சி-மின் சந்திப்பு

இந்தியப் பிரதமர் பண்டித நேரு அக்டோபர் 16-ல் சீனா செல்லும் வழியில் ஹனோயில் இரவு தங்கும்பொழுது, வியட்மின் நாட்டின் ஜனநாயகக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஹோ-சி-மின் அவர்களைச் சந்திப்பார் என்று தெரிகிறது.

டாக்கா, செப். 22—

இந்தியாவில் பாகிஸ்தான் ஹை கமிஷனராக இருக்கும் ராஜா கஜன்பர் அலிகான் கிழக்கு பாகிஸ்தானின் கவர்னராக நியமிக்கப்படலாம் என்று தெரிகிறது.

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 24—9—54 வெள்ளி


# விளையாட்டுக்கூடம்!

‘உத்தமனாக வாழ்வான்; உலகோர் புகழும் வண்ணம் காரியமாற்றுவான்; அவனால் அவன் பிறந்த வீடும், நாடும், வளம் பெறும்,’ என்று எதிர்பார்க்கப்பட்ட இளைஞன் ஒருவன் உன்மத்தனாகி, ஊர்மக்களிடையே, ‘கொடியவன், ஏமாற்றுக்காரன், சந்தர்ப்பவாதி,’ என்று தனது தீய நடத்தையால் பெயர் பெற்றான் என்றால், அந்த இளைஞனை மகனாகப் பெற்ற தாய் தந்தையர் மனம் புழுங்குவர்; ‘மாணிக்கமாக வேண்டியவன் மடமையில் உழல்கிறானே, என் செய்வது?’ என்று ஏங்குவர்.

‘நல்லவர்; நாணயமானவர்; நாட்டு மக்களின் குரலுக்கு மதிப்பளிக்கும் மாண்பு பெற்றவர்,’ என்றெல்லாம் எண்ணி ஒருவரை நாட்டின் அதிபராகவோ அல்லது அமைச்சராகவோ மக்கள் தேர்ந்தெடுத்த பின்னர், அந்த மனிதர் அதிகார வெறி கொண்டு, மனம் போக்குடன் ஆட்சி நடத்தி, ‘தனக்கும், தன் பாதம் தாங்கிகளுக்கும் மட்டுமே பதவிகள் உரித்தானவை,’ என்று எண்ணி, இறுமாந்து, எதிர்ப்பு காட்டுவோரை மக்கள் என்றும் மதியாது கோழைகள், அறிவிலிகள் என்று ஏசி, அவர்கள் மீது அடக்குமுறையை வீசத் துவங்கினார் என்றால், நாட்டு மக்கள், ‘எவ்வளவோ எச்சரிக்கையுடனிருந்தும், கொடியவன் ஒருவன் உள்ளே நுழைந்து விட்டானே,’ என்று மனம் புழுங்கி, வேதனையால் துடித்துப் போவார்கள்.

‘அருமையான கனி; அமுதம் என்று இதன் சுவைக்குத் தான் பெயர்,’ என்று கூறப்படும் பழத்தைத் தின்னும்போது, அது நச்சுக் கனி என்று அறிய நேர்ந்தால், அதை உண்ணும் மனிதனின் துடிப்பு சொல்ல முடியாதது.

இதுபோல் எண்ணுவது ஒன்றும், உண்மையில் நடப்பது வேறொன்றுமாக பல நிகழ்ச்சிகள் உலகிலே உண்டு. அதுபோன்ற நிலையில்தான் ஐக்கிய நாடுகள் சபையும் உள்ளது. உலகிலே அமைதியை நிலைநாட்டவும், உலக நாடுகளிடையே போர் மூளாது பார்த்துக்கொள்ளவும் அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை இன்று உலக மக்களைப் பார்த்துக் கேலி செய்வது போன்று காட்சியளிக்கிறது என்றால், “அமைதி ஏற்படுமா? போரில்லா காலமாவது நமது வாழ்வில் மீண்டும் ஏற்றம் கிடைக்குமா?” என்று ஏங்கி நிற்கும் உலக மக்களில் பலர், ஐ. நா. சபையின் போக்கை எண்ணி எண்ணி வேதனைப்படுகிறார்கள்.

யாருடைய வாழ்வையும் முன்னேற்றத்தையும் கருதி அமைக்கப்பட்டதோ அவர்களுக்கு நன்மை ஏதும் செய்ய முடியாத நிலையில் ஐ. நா. சபை இயங்குவது மட்டுமல்ல; அது அமெரிக்க வல்லரசுகளின் விளையாட்டுப் பொம்மையாக மாறிவிட்டதோ என்று எண்ணுவதற்குக் காரியங்கள் நடைபெற்றவண்ணம் இருக்கின்றன.

உலக நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்டு இயங்க வேண்டிய ஐ. நா. சபை, சீனத்திலுள்ள 60 கோடி மக்களின் பிரதிநிதியான கம்யூனிஸ்ட் சீனாவை உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ள மீண்டும் ஓர் முறை மறுத்துவிட்டிருக்கிறது.

சீனாவை உறுப்பினராக அனுமதிக்க வேண்டுமென்ற ரஷ்யாவின் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டு, ‘சீனாவை அனுமதிப்பதோ, அல்லது சியாங் சர்க்காரின் பிரதிநிதிகளை வெளியேற்றுவதோ இன்னும் ஒரு ஆண்டுக்குக் கூடாது,’ என்ற அமெரிக்க பிரேரணை இரு தினங்களுக்கு முன்பு ஐ. நா. சபையில் பெரும்பான்மையான வாக்குகளால் நிறைவேறியிருக்கிறது.

சீனாவை இப்போது ஐ. நா. சபையில் அனுமதிக்கக் கூடாது என்பதற்கு அமெரிக்கா கூறுகிற வாதம், மிகவும் விசித்திரமானது. கொரியன் போரிலே கம்யூனிஸ்ட் சீனா ஒரு பங்குதார் என்றும், ஐக்கிய நாடுகள் சபையின் படையை எதிர்த்தும் போரிட்ட நாடு என்றும், ஆகவே, ஐ. நா. சபையின் எதிரியான நாடாக சீனா விளங்குவதால் கொரியப் போருக்கு ஒரு முடிவு காணும் வரையில், சீனாவை ஐ. நா. சபையில் அனுமதிக்கக் கூடாதென்றும் அமெரிக்கா வாதிக்கிறது. இது, நல்லவர்களால் ஒப்புக்கொள்ளக்கூடிய வாதம் அல்ல.

அறுபது கோடி மக்களைக் கொண்ட நாடு, உலக நாடுகள் சபையில் உறுப்பினர் ஆகத் தகுதியற்றது என்று மட்டும் அமெரிக்கா கூறவில்லை; பார்மோசா தீவில் பதுங்கிவாழும் அறுபது கோடி சீன மக்களின் எதிரியான சியாங்-கே-ஷேக்கின் பிரதிநிதியை அங்கீகரித்து உட்காரவும் அனுமதி அளித்திருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபை, அதன் ஆரம்ப காலமுதல் அமெரிக்காவின் குரலுக்கு மட்டும் மதிப்பு தரும் ஒரு அமைப்பாக மாறி வருகிறது,’ என்ற எண்ணம் பரவலாகவே நிலவி வருகிறது.

இந்தியாவின் எல்லையில் நடைபெற்ற காஷ்மீர் போரை முடித்து கண்ணியமாக ஐ. நா. சபை தனது கடமையை நிறைவேற்றியது என்று கூற முடியாது.

தென் ஆப்பிரிக்க நிறவெறிப் பிரச்சினையைப் பற்றி ஐ. நா. சபையில் அடிக்கடி பேசுகிறார்கள்; பயன் ஏதும் காணோம்.

கொரியாவில் போர் மூண்டது; அங்கே, அமெரிக்காவின் அதிகாரிகள், யார் எதிரி என்றார்களோ, அவர்களை எதிரிகளாக மதித்து, அமெரிக்கத் துருப்புகளையே ‘ஐ. நா. சபைத் துருப்புகள்’ என்று விளம்பரமிட்டு அனுப்பினார்கள்.

அணு குண்டு பரிசோதனை நடத்தி, அதன் மூலம் வானிலையில் பெருத்த மாறுபாடுகள் ஏற்படக் காரணமாக உள்ள அமெரிக்கப் போர் வெறியைக் கட்டுப்படுத்த ஐ. நா. சபையினால் இயலவில்லை.

ஐக்கிய நாடுகள் சபை உலகப் பிரச்சினைக்கு பாரபட்சமின்றி பரிகாரம் காணும் தன்மையற்றது என்பதை உலகுக்கு அறிவித்த நிகழ்ச்சி தான், ஜினிவாவில் நடந்த இந்தோ-சீனா மாநாடு.

ஒன்பது ஆண்டுகளாகியும், ஐக்கிய நாடுகள் சபை, உலக நாடுகளின் மனதைக் கவரும் வண்ணம் காரியமாற்றவில்லை.

ஆனால், அதற்கு மாறாக அது, வல்லரசுகளின் விளையாட்டுக்கூடமாக காட்சியளிக்கிறது.

சீனாவை, தனது உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ள மறுப்பதும், அமெரிக்காவின் வளர்ப்புப் பிள்ளையான—வாழ்வை இழந்துவிட்ட சியாங்கின் பிரதிநிதிகளுக்கு இடம் கொடுத்திருப்பதும், ஐ. நா. சபையின் சாசனத்திற்கு ஒரு இழுக்காகும். இதை, ஐக்கிய நாடுகள் சபையில் அரசியல் குருட்டாட்டம் நடத்தும் வல்லரசுகள் உணர வேண்டும்.

சீனாவை அனுமதிக்க மறுப்பதால், சீன மக்களுக்கு நஷ்டம் ஏதும் கிடையாது; மாறாக, சோவியத் யூனியனுடன் அதன் தொடர்பு இன்னும் அதிகமாவதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது எனலாம்.

தொடர்ந்து சீன மக்கள் குடியரசுக்கு மதிப்பளிக்க ஐக்கிய நாடுகள் அமைப்பு மறுக்கிறதென்றால், மக்கள், அதன் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை இழந்துவிடுவார்கள். குறிப்பாக ஆசிய மக்கள், ‘அது மேற்கத்திய வல்லரசுகளின் பிடியில் சிக்கிய ஒரு விவாதக்கூடம்,’ என்று எண்ணுவார்கள்.

உண்மையாக ஒரு நாட்டின் அரசாங்கப் பிரதிநிதியை அனுமதிக்க மறுத்து, பார்மோசாவிலுள்ள அனாதை அரசின் ஊழியர்களை மற்ற நாட்டு உறுப்பினர்களுடன் சேர்ந்து உட்கார ஐ. நா. சபை அனுமதிக்கிறது என்றால், அது, உண்மை விரும்பிகளையும், அரசியல் வாழ்வில் நாணயம் தேவை என்று கூறுவோரையும் கேலி செய்கிறது என்றுதான் கூற வேண்டும்.

உலக அமைதிக்கு வழி வகுக்க அமைக்கப்பட்ட அமைப்பு, அமைதி என்ற சொல்லையே கேலி பேசுகிறது என்றால், இந்த அவல நிலையைக் கண்டு வேதனைப்படுவதைத் தவிர, வேறு என்ன செய்ய இயலும்?

உலகம் எதைச் செய்ய விரும்புகிறது; உலக மக்களுக்கு உண்மையாகச் சேவை செய்வோர் யார் என்பதை உணர்ந்து, அவர்கள் வழியே ஐ. நா. சபை செல்ல வேண்டும்; அமெரிக்காவின் விளையாட்டுக் கருவியாக அது விளங்கக்கூடாது.

அதன் போக்கு மாறவேண்டும்; எந்த இலட்சியத்திற்காக அது அமைக்கப்பட்டதோ, அந்த இலட்சியத்தை அடைய ஐ. நா. சபை முயல வேண்டும். அந்த இலட்சியப் பாதையிலிருந்து ஐ. நா. சபை தவறிச் செல்லுகிறதென்றால், அது, சர்வதேச சங்கத்திற்கு துணை போகும் நிலைமையை ஏற்படுத்திவிடக் கூடும்.

அமைதியைக் காக்க வேண்டும் என்று உலக மக்கள் விரும்புகிறார்கள்; ஆதிக்க வெறியர்கள்—அவர்கள் எந்த வல்லரசாக இருந்தாலும்—அதன் அடிமையாக ஐ. நா. சபை இருக்கக்கூடாது என்று உலகம் எதிர்பார்க்கிறது. அது வீணர்களின் விளையாட்டுக் கூடமாகக் கூடாது!

## ஐ. நா. சபை தலைவர் வான் கிளீபன்ஸ்

### சிறந்த சட்ட நிபுணர்

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள செல்கோ வான் கிளிபென்சுக்கு 59 வயதாகிறது; 17—10—1894-ம் ஆண்டில் ஹாலந்தில் பிறந்த இவர் 1918-ம் ஆண்டில் லேடன் பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்லூரியில் டாக்டர் பட்டம் பெற்று, சர்வதேச சங்கக் காரியாலயத்தில் 1922-ம் ஆண்டு வரையில் பணியாற்றினார்.

பின்னர் நெதர்லாந்தின் இராஜிய விவகாரங்களில் கலந்து கொண்டார். 1947 முதல் 1950-ம் ஆண்டு வரை வான் கிளிபன்ஸ், அமெரிக்காவில் நெதர்லாந்து நாட்டின் தூதுவராக இருந்திருக்கிறார்.

சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற முதல் ஐக்கிய நாடுகள் சபைக்கான அமைப்புக் கூட்டத்தில் வான் கிளிபன்ஸ் நெதர்லாந்து தூதுக் குழுவிற்குத் தலைமை வகித்தார்.

கடந்த ஜூலையில் இவர் ஐ. நா. பாதுகாப்பு சபையின் தலைவராக இருந்திருக்கிறார்.

சிறிது காலம் இவர் போர்ச்சுக்கல்லில் தூதுவராகப் பணியாற்றியிருக்கிறார்; சென்ற உலகப் போரின்போது நெதர்லாந்தின் வெளிநாட்டமைச்சராக நியமிக்கப்பட்டு பின்னர் லண்டனில் போர்க்காலத்தில் நெதர்லாந்து சர்க்கார் இயங்கியபோது அப்பதவியில் நீடித்துப் பணியாற்றியிருக்கிறார்.

வான் கிளிபன்ஸ் சிறந்த ராஜதந்திரி மட்டுமல்ல; அவர் ஒரு சட்ட நிபுணருமாவார்.

ஹேக் அகாடமியில் அனைத்துலக சட்டம் பற்றிய ஆராய்ச்சியில் அவர் கடந்த 30 ஆண்டு காலமாக ஈடுபட்டுள்ளார். ஜப்பான்—நெதர்லாந்து இருநாடுகளுக்கிடையே நிலவிய சட்ட தொடர்புகள் பற்றி அவர் நூல் ஒன்று எழுதியிருக்கிறார்.

ஹாலந்தில் நாஜிகளின் படையெடுப்பு பற்றியும் அவர் நூல் ஒன்றை எழுதியிருக்கிறார்.

## சென்னைக்கு ரூ. 5½ கோடி

### டில்லி கடன் தருகிறது

மத்திய சர்க்காரின் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சென்னை மாநிலத்துக்கு கிராமாந்திர மின்சார திட்டத்திற்காக ரூ 3 கோடியும், நகரங்களில் தண்ணீர் விநியோக உதவிக்காக ரூ 2½ கோடியும் ஆக மொத்தம் ரூ. 5½ கோடி அனுமதித்துள்ளதென்று, சென்னை இராஜ்ய நிதி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

இந்தத் தொகையிலிருந்து சென்னை நகர குடிதண்ணீர் உதவி அபிவிருத்திக்காக, சென்னை நகரசபைக்கு ரூ 50 லட்சம் அளிக்கப்படும்.

இந்தக் கடனுதவியால், தற்போது மின்சாரத் திட்டம் விநியோகிக்கப்பட்டுவரும் கிராமங்களின் எண்ணிக்கை 250-லிருந்து 350 ஆக அதிகரிக்கப்படுமென்றும், பல நகரசபைகளுக்கும் குடிதண்ணீர் வசதிகளுக்கு உதவி கிடைக்குமென்றும், தெரிகிறது. இந்தத் தொகைக்குள் முடிக்கக்கூடிய தண்ணீர் விநியோகத் திட்டங்களைத் தயாரிக்கும்படி பிரதம எஞ்சினியரும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறாராம்.

இப்போது சென்னை மாநிலத்தில் 2,610 கிராமங்களில் மின்சார வசதிகள் கிடைக்கின்றன. இத்திட்டம் முடிவதற்குள் சுமார் 3,200 கிராமங்களுக்கு மின்சாரம் கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய சர்க்காரின் தேசிய திட்டக் கடன் வசூலுக்கென்று சென்னைக்கு ஒதுக்கப்பட்ட பகுதி நீங்கலாகத்தான், இந்த 5½ கோடி ரூபாயும் கொடுக்கப்படுகிறதாம்.

---

லண்டனில் ஒரு லாரியில் ஏற்றப்படும்போது 46,000 டாலர் பெறுமான தங்கக் கட்டிகளைத் திருடர்கள் கொள்ளையடித்து விட்டனர்.

விமான நிலையத்துக்கு அந்தத் தங்கத்தை ஒரு பாங்கி அனுப்பியிருந்தது.

## தொழிலாளருக்கான இன்ஷூரன்ஸ் திட்டம்

### கோவையில் ஒத்திவைக்கப்படும்

கோவைப் பகுதியில் அநேகமாக அக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்படலாம் என்றிருந்த ‘சமூக இன்ஷூரன்ஸ்’ திட்டம் இப்போது ஆரம்பிக்கப்படாது என்று தெரிகிறது.

மன நிறைவு அளிக்கும் வகையில் இதுவரையும் போதுமான அளவு மருத்துவர்கள் கிடைக்காதே இதற்குக் காரணமாம்.

இத்திட்டத்தில் வேலை செய்ய, கோவையிலும், வெளியிடங்களிலுமிருந்து சுமார் 50 வைத்தியர்கள் மனுச் செய்து கொண்டதில், 35 பேர் மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

உப்பிலிபாளையத்திற்கு வேண்டிய 6 வைத்தியர்களில் ஒருவர் மட்டுமே அந்த ஊரில் வசிப்பவரென்றும், சிங்காநல்லூருக்கு வேண்டிய 8 பேர்களில் ஒருவர் தான் அங்கிருப்பதாகவும் தெரிய வருகிறது.

## வேர்க்கடலையிலிருந்து பால் எடுக்க ஆராய்ச்சி

நிலக்கடலையிலிருந்து பால் இறக்க முடியுமென்றும், அவ்வாறு இறக்கப்படும் பால், பசுவின் பால், எருமைப் பால்களுக்கு ஏறக்குறைய சமமாயிருக்கிறதென்றும் அண்மையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் நிரூபித்திருக்கின்றன.

இந்த நிலக்கடலையிலிருந்து கிடைக்கும் பாலின் சாரம், மற்ற பால்களின் சாரத்திற்கு சமமாயிருப்பதென்று தெரியாமலிருந்தாலும், விற்பனையாளர்கள் இதைக் கலப்படப் பாலாக உபயோகித்து வந்திருக்கின்றனர். புதிதாகத் தோண்டி எடுக்கப்பட்ட நிலக்கடலையிலிருந்து பால் தயாரிக்கும் முறை இதுவரையிலும் நன்றாக விளக்கப்படவில்லை.

சுமார் 1½ மணி நேரம் நிலக்கடலையைத் தண்ணீரில் ஊறவைக்கவேண்டும்; பின் கடலைப் பருப்புகளின் மேல் உள்ள இலேசான தோலை அகற்றிவிட்டு, அந்த மணிகளைப் பிசின் போல் வரும் வரை நன்றாக அரைக்க வேண்டும்; அதோடு தண்ணீரைச் சேர்த்து 10 நிமிடங்கள் கொதிக்கவைத்து, நல்ல துணியால் வடிகட்ட வேண்டும். எஞ்சி நிற்கும் சக்கையை மறுபடியும் தண்ணீரோடு கலந்து எவ்வளவு பால் இறக்க முடியுமோ, அவ்வளவு பாலை இறக்க வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட பாலைக் காய்ச்சி, அதோடு சிறிது மோர் ஊற்றி இரவில் வைத்தால் மறுநாள் அது தயிராகமாறிவிடும்.

# பிற்போக்குத் தன்மை மாற வேண்டும்

## நமது சக்தியை உணர்ந்து பணிபுரிவோம்!

### பரந்தூர் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை வேண்டுகோள்

செங்கற்பட்டு மாவட்டம் பரந்தூர் தி. மு. கழக முதல் ஆண்டு நிறைவு விழா 21-9-54 மாலை 7-30 மணிக்கு மறைந்த மாவீரர் அரங்கசாமி மன்றத்தில் தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரையாக தி.மு. கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார். தோழர்கள் சி. வி. இராசகோபால், வேணு, அ. பொன்னம்பலனார், கண்ணபிரான் ஆகியவர்கள் சமூக—பொருளாதார—அரசியல் விடுதலை பெறப் பணியாற்றும் தி. மு. கழகத்தைப் பொதுமக்கள் ஆதரிக்க வேண்டுமென்றும், அதன் கொள்கைகளை மக்கள் மனதில் பதியும்படி தி. மு. கழகத் தோழர்கள் விளக்கமாக எடுத்துக்கூறி கிளைக் கழகங்கள் எங்கும் ஏற்படும்படி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

பின்னர் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களுக்கு பல கிராம கிளைக் கழகங்களும், பரந்தூர் தி மு கழகத் தோழர்களும் மலர் மாலைகள் சூட்டியும், கைத்தறி ஆண்டை வழங்கியும் வரவேற்பு கூறினார்கள்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பேசுகையில், சமூகத்தில் உயர்வு - தாழ்வு ஏற்படுத்திக் கொண்டு இன்னல் படுவதும், பழைமையில் மோகம் கொண்டு, புதுமையை வெறுப்பதும் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றதில்லை என்றார்.

பிற நாட்டு மக்கள் விஞ்ஞான வளர்ச்சியின் துணை கொண்டு புதுப்புது கருவிகளைக் கண்டு பிடித்து மக்கள் வாழ்க்கைக்கும் பயன்பட உதவுகிறார்கள்; நாம் ஆயிரம் ஆண்டுகட்கு முன் கண்டு பிடித்தகுத்துவிளக்குகள், மாட்டு வண்டிகள் ஆகியவைகளில் கூட மாற்றம் ஏற்பட முடியாதபடி பிற்போக்காக வாழ்கிறோம்; மதம், கடவுள், கோயில், திருவிழா, பிரார்த்தனைகள் போன்ற காரியங்களில் பெரும் பொருள்களைப் பாழாக்கி அறிவுக்குப் பொருத்தமற்ற செயல்களால் இடர்படுகிறோம்; இந்நாட்டில் பார்ப்பனியம் எல்லாத் துறைகளிலும் உயர்வு பெற்று, ஆதிக்கம் செலுத்துகின்றது; நாம் அடிமைகளாய்ப் பலப்பல சாதிகளாய்ப் பிரிந்து கிடக்கிறோம்; இதனால் மக்கள் கூட்டுறவு சக்திகள் பிளவுபட்டு, வீண் சாதிப் பெருமை பேசி, வாழ்வில், உணவு, உடை, குடியிருப்பு வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி, கைத் தொழில் வசதி ஆகியவைகள் எதுவும் பெறமுடியாத நிலைமையில் அழுந்திக் கிடக்கின்றோம்; பசி, வறுமை, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவைகளால் அவதிப்படுகிறோம். சாதி, மத, சமயப் பூசல்களால் பெரும் பிளவுகளை உண்டாக்கிக் கொண்டு முன்னேற்றமடையாமல் பிற்போக்குக் குழுவினராய் வாழ்கின்றோம்; உடனடியாக இந்த நிலைமைகள் மாறவேண்டும்; என்று குறிப்பிட்டார்.

நம் நாட்டுச் செல்வம் வடவர், வியாபாரம் என்ற பெயரால் பிறரால் சுரண்டப்படக் கூடாது; நம் நாட்டை நாமே ஆட்சி புரியும் உரிமை நமக்கு வேண்டும்; சிறுசிறு நாடுகள் தனியாக வாழ்கின்றது — நாம் தனியாகப் பிரிந்து ஏன் வாழக் கூடாது? நாம் ஒன்றுபட்டால், நம் சக்தியை உணர்ந்து பணியாற்றினால் உறுதியாக வெற்றிபெறுவோம்; திராவிட நாட்டை அடைந்தே தீருவோம் என்று விளக்கினார்.

• • •

இறுதியாக தோழர்கள் பலரும், அண்ணா அவர்களும் ஒரு வேண்டுகோள் விடுத்துப் பேசியதாவது:—

செங்கற்பட்டு மாவட்ட தேர்தலில் சுயேச்சையாக நிற்கும் தோழர் சி. வி. எம். அண்ணாமலை பரந்தூர் பிர்க்காவில் அபேட்சகராக நிற்கிறார்; அவர் பொது நலம் கொண்டவர்; கொள்கையில் உறுதியும், இன்னல்கள் வந்த சமயத்தில் ஓடி மறையாமல், அரசியலார் அடக்குமுறைகட்கு அஞ்சாமல், இருமுறை சிறை சென்றவர்; மக்கள் முன்னேற்றம் கருதி பல ஆண்டுகளாகப் பொதுத் துறையில் பணியாற்றி வருபவர்; தேர்தல் நாளன்று, அவருக்கு அடையாளமுள்ள — கூசாப் பெட்டிக்கு வாக்குரிமை அளித்து அவரை ஆதரிக்க வேண்டுகிறேன்; அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் கிராம மக்கட்கு மேலும் தம்மாலான வகையில் சேவை செய்வார்; செங்கற்பட்டு மாவட்ட போர்டார் பொருள் நிலைக்கேற்றபடி பள்ளிக்கூடங்கள், மருத்துவ வசதிகள், ரோடு வசதிகள் ஆகியவற்றைக் கவனித்து வேண்டுவன செய்வார் என்று குறிப்பிட்டனர்.

ஜில்லா போர்டு நிர்வாகத்தில் அரசியல் கட்சி பூசல்கள் கூடாது; காங்கிரஸ் கட்சியார் ஆட்சிபீடத்திலிருந்து கொண்டு இந்த ஏழு ஆண்டுகளாய்ச் செய்து வந்திருக்கும் நன்மைகள் என்ன என்பதை நன்கு அறிவீர்கள்; இதுவரையில் ஏற்பட்ட இன்னல்களை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்; காங்கிரஸ் கட்சி பணக்காரர்களையும், மில் முதலாளிகளையும், மிட்டாதாரர்களையும், ராஜாக்களையும், ஜமீன்தார்களையும், கொள்கையில் பற்றில்லாத சுயநலம், பதவி ஆசை, பர்மிட், மந்திரிப் பதவி, மோகம் கொண்ட சந்தர்ப்பவாதிகளை எல்லாம் சேர்த்துக் கொண்டு தேர்தல் வேட்டையாடுகிறது; பண செல்வாக்கால் மக்கள் வாக்குரிமைகளைப் பறிக்கலாம் என்று துணிவுஞ் செய்கிறார்கள் என்பதை நினைவூட்டினர்.

காங்கிரசின் செல்வாக்கு குறைவதை ஈடு செய்ய கிராமமக்கட்கு பெரும் பொருட் செலவில் மந்திரிகளை அழைத்துவந்து, கோவில்களுக்குப் பூக்குடைகள் வாங்கித் தருகின்றோம்-கோயில் கட்டி, கும்பாபிஷேகம் செய்யப் பொருள் கொடுக்கின்றோம் என்பன போன்ற ஆசை வார்த்தைகளைக் கூறி, கிராம மக்களை ஏய்க்க முயலுகின்றனர் என்று எச்சரித்தனர்.

மாட்டுப் பெட்டியை மறக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ள சந்தர்ப்பவாதிகள் உங்களிடம் வருவார்கள்; கார் கொண்டு வருகின்றோம் என்பார்கள்; எனவே, இந்த தேர்தல் கால தேச பக்தர்களிடம் ஏமாறாமல் சுயேச்சையாக நிற்கும் தோழர் சி வி. எம் அண்ணாமலை அவர்கட்கு கிராம மக்கள் ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

தலைவர் முடிவுரையுடன் ஆண்டு விழா நிகழ்ச்சி இரவு 10-30 மணிக்கு முடிவுற்றது.

நாடகம்

ஆண்டு விழா நிகழ்ச்சிக்குப் பிறகு இரவு 11 மணிக்கு, சென்னை காட்டேரி செந்தமிழ் நாடக மன்றத்தினர் ஆரியப் புரட்டினை விளக்கியும், நாட்டை ஆண்ட மன்னர்களை நசுக்க நச்சு ஆரியக் கொள்கைகளை நம்பும்படி செய்த ஆரியர்களும், புரோகிதர்களும் கையாண்ட தந்திரங்களையும், சதிச் செயல்களையும் விளக்கி, உணர்ச்சி ததும்ப அதிகாலை 3-30 மணி வரை நடித்துக் காட்டினார்கள்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் நாடக மன்றத்தார் அறிவு வளர்ச்சிக்கேற்ற சமூக சீர்திருத்த நாடகங்களை நடத்தி வருவதையும், நடிகர்கள் உணர்ச்சியுடன் நடிப்பதையும் பாராட்டிப் பேசினார். நன்றி கூறலுடன் நாடகம் முடிவுற்றது.

## கைத்தறி தொழில் அபிவிருத்தி

### மாநில சர்க்கார்களுக்கு மேலும் பண உதவி

பல்வேறு மாநிலசர்க்காருக்கு, கைத்தறித் தொழில் அபிவிருத்திக்காக, இந்திய சர்க்கார் மேலும் சில சகாயத் தொகைகளையும், கடன் தொகைகளையும் இப்பொழுது அனுமதித்திருக்கின்றனர்.

பிரதம கைத்தறி சங்கங்கள் உற்பத்தி செய்யும் கைத்தறித் துணிகள் விற்பனைக்கு ஏற்பாடு செய்வதற்காக சென்னை மாநில கைத்தறி நெசவாளர் சங்கத்துக்கு அளிக்கப்படுவதற்காக சென்னை மாநிலத்திற்கு 35 லட்சம் ரூபாய் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆந்திர மாநிலத்தில், கூட்டுறவு சங்கங்களில் சுமார் 5,000 நெசவாளர்கள் சேருவதற்கு வசதியாக, அவற்றிற்கு மூலதனமும், நிர்வகிப்பதற்கு வேண்டிய பணமும் கொடுப்பதற்காக அந்த மாநிலத்திற்கு மேற்கொண்டு ரூ 24 93 250 கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது.

உத்திர பிரதேசத்துக்கு ரூ 14 55 690 கடனாகவும், ரூ 67,040 சகாயத் தொகையாகவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

பம்பாய் மாநிலத்திற்கு ரூ 3,50 000 கடனாக வழங்கப்பட்டிருக்கிறது.

பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதற்காக மத்திய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப் படுவதற்காக திரு—கொச்சி மாநிலத்திற்கு ரூ 3 50,000 கடனாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது ஒரிசாவுக்கு ரூ 2,26,972 சகாயத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது

## அப்பாக்கிப் பிரயோக விசாரணை!

### சங்கரன் நியமனம்

நாகர்கோவில், செப் 22—சமீபத்தில் நடைபெற்ற திரு—கொச்சி அப்பாக்கிப் பிரயோகம் பற்றிய நகிரங்கமான விசாரணை நடத்த, திரு—கொ. உயர்நீதி மன்ற நீதிபதி கே சங்கரன் நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பத்திராவதி இரும்புத் தொழிற்சாலை

மைசூரிலிருக்கும் பத்திராவதி இரும்பு எஃகுத்தொழிற்சாலையை விரிவுபடுத்த சர்க்காருக்கு ஆலோசனை கூறுவதற்கு, அமெரிக்கக் கம்பெனியிலிருந்து சில பிரபல ஆலோசகர்கள் அழைக்கப்பட்டிருப்பதாக மக்கள் சபையில் வர்த்தக மந்திரி டி.டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்துள்ளார்.

## நாடக சட்டம் திருத்தப்படும்!

### அடிப்படை உரிமைகளுக்கு முரணாக இருக்கிறதாம்

### சென்னை சர்க்காரின் கண்விழிப்பு!

சென்னை சர்க்கார் 1876-ம் வருட நாடக சட்டத்திற்கு திருத்த மசோதா ஒன்று கொண்டுவரத் தீவிரமாகப் பரிசீலிக்கின்றனர் என்று தெரிகிறது.

இப்போதுள்ள சட்டத்தின்படி சர்க்காரின் உத்திரவுதான் இறுதியானது.

சர்க்காரது உத்திரவின் மீது அப்பீல் உரிமை அளிக்கப்படவில்லை; இது அரசியல் சட்டம் அளிக்கும் அடிப்படை உரிமைகளுக்கு முரண் என்று சட்ட நிபுணர்கள் கருதுகின்றனர்.

நீதிமன்ற பரிசீலனைக்கு வசதி அளிப்பதும், அப்பீல் உரிமை அளிப்பதும் உத்தேச திருத்தத்தின் நோக்கமாகும்.

## தேவதாசி சட்டம் வரும்!

அடுத்து நடைபெறவிருக்கும் சென்னை கீழ்சபை (அசெம்பிளி) கூட்டத்தில், பொட்டுக்கட்டும் வழக்கம் முறையினை ஒழிக்கும் மசோதா ஒன்று வருமென தான் எதிர்பார்ப்பதாக நிதி அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

இதுபோன்ற ஒரு மசோதாவை சர்க்கார் தீவிரமாகப் பரிசீலனை செய்து வருவதாக கடந்த அசெம்பிளி கூட்டத்தில் ரெவின்யூ அமைச்சர் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறார்.

## அழகப்பா மருத்துவக் கல்லூரி

### பரிசிலனைக் குழு நியமனம்

சென்னை, செப். 22—காரைக்குடியில் வைத்தியக் கல்லூரி ஒன்றை நிறுவ, டாக்டர் அழகப்பச் செட்டியார் கல்லூரி அதிகாரிகள் முனைந்திருப்பது பற்றி, சென்னை சர்க்கார் ஒரு பரிசீலனைக் குழு ஒன்றை நியமித்திருக்கிறார்கள்.

இந்தக் குழுவின் செயலாளராக, டாக்டர் கே பி. சாரதியும், உறுப்பினர்களாக டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், சென்னை மேல்சபை உறுப்பினர் டாக்டர் பி வி. செரியன், சென்னை வைத்தியக் கல்லூரித் தலைவர் டாக்டர் சி. கே. பிரசாத ராவ் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியக் கல்லூரியும், மருத்துவமனையும் நிறுவ ஆகும் மொத்தச் செலவும் வருடாந்திரச் செலவும் எவ்வளவு ஆகுமென்று தெரிவிக்கவும், காரைக்குடியில் வைத்தியக் கல்லூரி நிறுவ வசதியில்லையென்றால், மாநில தலைமை மருத்துவமனை இருக்கும் தஞ்சாவூரில் வைத்தியக் கல்லூரி ஆரம்பிக்கும் மாற்றுத் திட்டம் பற்றியும் முழு தகவல்கள் தரும்படி இக்குழுவினர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

## பூட்பாலிஷ் செய்து......

### மாணவர்கள் நிதி திரட்டினர்

அஸ்ஸாம், பீஹார், வங்காளம் ஆகிய ராஜ்யங்களில், பெருவெள்ளத்தால் சேதமடைந்தவர்களுக்கு உதவ, நாகபுரி கல்லூரி ஒன்றில் படித்துவரும் 25 மாணவர்கள் பூட்பாலிஷ் செய்து நிதி திரட்டினர் என்று தெரிகிறது.

அவர்கள் அளித்த நன்கொடை ரூ 262-4-6 யும் பெற்றுக் கொண்டு, முதல் மந்திரி சுக்லா, 'கல்வி கற்றப் பெரியோர்கள் புகழ்ந்து கூறியுள்ள உழைப்பின் மேன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டாக அந்த மாணவர்கள் செய்துள்ளனர்' என்று புகழ்ந்து பேசினார்.

## விஜயலட்சுமி பண்டிட்

### லண்டனில் இந்தியத் தூதுவராகிறார்

நியூயார்க், செப். 22—ஐக்கிய நாடுகள் சபையின் தலைவராக இருந்த விஜயலட்சுமி அம்மையார் லண்டனில் இந்தியத் தூதுவராக நியமிக்கப்படலாம்.

லண்டனில் இந்தியத் தூதுவராக உள்ள பி ஜி கேர் விடு முறையில் இந்தியா வந்திருக்கிறார். அவர் தனது வேலையை ராஜினாமா செய்துவிட்டார் என்று தெரிகிறது

விஜயலட்சுமி பண்டிட் நவம்பர் மாத ஆரம்பத்தில் தனது புதிய பதவியை ஏற்பார் என்று தெரிகிறது.

## டில்லிக்கு வருக!

### 100 காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு தந்தி

மக்கள் சபை காங்கிரஸ் உறுப்பினர்களில் சுமார் 100 பேரை உடனடியாக டில்லிக்கு வரும்படி தந்திகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. முன்னுவது அரசியல் திருத்த மசோதா பற்றிய கூட்டுக் குழு அறிக்கையின்மேல் மக்கள் சபையில் வாக்கெடுப்பு நடைபெறும். அதற்காக அவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மக்கள் சபையில் பெருமளவில் உறுப்பினர்கள் வந்திருக்க வேண்டியது மிக அவசியம். ஏனெனில், மக்கள் சபையிலுள்ள மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையினர் ஆதரவுடன் இத்திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டும். மேலும் கூட்டத்தில் வாக்கெடுப்பு நடைபெறுகையில், கலந்துகொள்ளும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு பெற்று இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமாம்.

## சஜ்ஜாட் ஜாகிர் அலிகான்

### பதவியில் நீடிப்பார்

புதுடில்லி, செப். 22—இந்தியாவில் பாகிஸ்தானின் தூதுவராக இப்போது பதவியில் இருக்கும் சஜ்ஜாட் அலிகான் பாகிஸ்தான் பிரதமரின் வேண்டுகோளின் பேரில் பதவியில் நீடித்திருக்க ஒப்புக்கொண்டிருக்கிறார், என்று தெரிகிறது.

நேற்றிரவு அவரை கராச்சியிலிருந்து டெலிபோன் மூலம் பதவியில் நீடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது என்றும், அவர் அதற்கு ஒப்புக்கொண்டார் என்றும் தெரிகிறது.

## இராசேந்திரருக்குக் கார்

### ஜெர்மனியிலிருந்து வந்திருக்கிறது

இந்திய மத்திய சர்க்கார், ஜனாதிபதி இராசேந்திர பிரசாத்துக்கு ஜெர்மனியிலிருந்து ஒரு பெரிய கார் வாங்கியிருக்கிறது.

இந்தக் கார் கப்பல் மூலம் பம்பாய் துறைமுகத்தில் இறக்கப்பட்டிருக்கிறது. மணிக்கு 100 மைல் ஓடக்கூடிய அந்தக் கார் 6 பேர் சவுகரியமாக உட்கார வசதியாயிருக்கிறதென்றும், ஜனாதிபதியிடம் அதை ஒப்படைக்கப்படுமுன் ஜெர்மன் நிபுணர்கள், அது நன்றாக ஓடுகிறதா என்று பரிசீலித்துப் பார்க்கப்படும் என்றும் தெரியவருகிறது.

